**SCHEME OF EVALUATION IN 2 PUC**

**MARCH EXAM - 2023**

**Subject Code: 04**

**TAMIL**

## பகுதி – ஒன்று

**I. வினாக்காளுக்கும் விடைஎழுதுக**

**[5x1=5]**

1). அரி

2). வெள்ளிவீதியார்

3). செல்வக்கொடி

4). மூவேந்தர்கள்

5). முருகன்

**II. கோடிட்ட இடங்களைநிரப்புக**

**[5x1=5]**

6) ஊக்கம்

7) மழை

8) அனுமன்

9) டெசிபல்

10) ஆங்கில

**III பொருத்துக:** **[5x1=5]**

11) போகம்

12) அண்ணாமலைச்செட்டியார்

13)ஏரி

14) ஊர்

15) கோடு

**IV. ஓரிரு வரிகளில் விடைஎழுதுக:** **[5x1=5]**

16) சேரன் இரும்பொறை

17) கொல்லாமை நன்று, கொலைசெய்தல் தீது.

18) ஏழை மக்களின் மனம் ஏங்குவதாகக் கூறுகிறார்.

19) போக்குவரத்து வாகனங்களால் தான் உலகெங்கும் பேரொலிகள் ஏற்பட்டு ஒலிமாசு உண்டாகுகிறது.

20) சரசுவின் மகனின் பெயர் கணேஷ்.

## பகுதி-2

### பிரிவு-1

**(அ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக. [3x2=6]**

21). கல்வி கற்று அறியாத பாமர் மனத்திலும் கூட கடவுள் காணமல் இருப்பார்.

22) எண்ணையும் எழுத்தையும் கற்பிக்கும் ஆசரியர் இல்லாத ஊரும், மக்களின் வழக்குகளை தீர்த்து வைக்கும் மூத்தோர் இல்லாத அவைக்களனும், நம்பிடம் உள்ளதை பகிர்ந்து உண்ணும் தன்மை இல்லாதாவர் குடிஇருப்பும் நன்மை பயக்காது.

23). மரம் மண்ணில் வேருன்றி கிளைகளைப்பரப்பிக் கொண்டுள்ளது. பூவும், பிஞ்சும் காயும், கனியுமாகி குடும்பத்துடன் தலை நிமிர்ந்து நிற்கிறது.

24). முதலும் முடியும் இல்லா அருக தேவன் மூவுலகத்தோரும், தேவர்களுக்கு எல்லாம் முதலாமவன் என வாழ்த்துகிறார்.

**ஆ**

### பிரிவு-2.

**[3x2=6]**

25) இருவர் உள்ளத்திலிருந்து ஊறிவருவதாகும். அது மட்டுமல்ல சந்தர்ப்பங்களின் நிர்ப்பந்தங்களாலும் பருவத்தின் உந்துதல்களாலும் பிறக்கசுடியது.

26). இயற்கை உருவங்களையும் கடவுள், தேவர் அரக்கர் முதலிய கற்பனை உருவங்களையும் அழகுபட அமைப்பதே சிற்பக் கலையாகும்.

27). நீர் வளமும், நிலவளமும் உடைய தமிழ்நாட்டில் பயிர்தொழில் சிறப்புற நடந்து வருகிறது. ஆற்று நீரையும் பயன்படுத்தி பயிர் செய்து மருத நிலமாக்கினர்.

28). வேடர்கள், மீனவர்கள். நெசவாளர்கள், கொல்லர்கள், விவசாயிகள், ஆடு மாடுமேய்பவர்கள் இசுலாமியர்கள் முதலானவர்.

**இ.**

### பிரிவு -3

**[3x2=6]**

29). யோஷிகிக்கு சிரிக்க சிரிக்க பேசத் தெரியும். அவருடைய நகைச்சுவை அசட்டு, பிசட்டு ரகமல்ல குப்புறத் தள்ளி வயிற்றைக் கிழிக்காது. சிரித்தவுடன் அங்கு விடுகிற சிரிப்புதான்.

30). பெருமைக்கு ஆசைப்பட்ட வேலப்பன் முதலாளி இவ்வளவு பெரிய மனிதரானதற்கு நான்தான் காரணம் என்று தன்னுடன் வேலை செய்பவர்களிடம் சொல்லிக் கொள்வது வழக்கம்.

31). பச்சிலைக்கட்டு இலை இடிக்கும் கல்லுரல், மருந்து அரைக்கும் கலுவம் ஆகியவை.

32). பண்ணைக்காரன் ஏழு பகல், ஏழு இரவு பயணம் செய்து காசியைக் சென்று அடைந்தான்.

## பகுதி-3

**எவையேனும் மூன்று வினாக்கருக்கு இடம்சுட்டி பொருள் விளக்கம் எழுதுக**

**[3x3=9]**

23) இடம்:- இறைவாழ்த்து இராமலிங்க பிள்ளை

பொருள்:- கடவுள் என்பவர் நமது எண்ணங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவர்.

விளக்கம்: கடவுள் என்பவர் கண்ணால் காண முடியாதவர். எல்லா இடங்களிலும் நீக்கமற நிறந்து விளங்குபவர். கற்பனையால் எண்ணிப் பார்த்தாலும் அதற்குமேலாக விளங்குவர்.

34) இடம் :- திரிகடுகம். நல்லாதனார்.

பொருள்: பொந்து இல்லாமல் முற்றி, நீண்ட காலம் உழைக்கும் வலிமையான மரம் என்பது பொருள். விளக்கம்: இவ்வுலகில் தோன்றிய ஒவ்வொரு மனிதனும் புகழ்பெற்று வாழ வேண்டும். ஆகவே அதற்கான கருத்துக்களாக வள்ளல் தன்மை கொண்டவனிடம் உள்ள செல்வமும் நல் உள்ளத்தை உடையவன்.

35) இடம் - சமூக சீர்திருத்தச் சிந்தனையாளர்கள் ச. சிவலிங்கம்.

பொருள்:- இட ஒதுக்கீட்டை விரும்பாத காந்திஜி அதை எதிர்த்து உண்ணாவிரதம் இருந்தார். அதனால் அம்பேத்கருக்கும், காந்திஜிக்கும் இடையே பூனா ஒப்பந்தம் ஏற்பட்டது.

விளக்கம்: இலண்டனில் நடத்த மாநாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டை அம்பேத்கர் பெற்று வந்தார். அதை விரும்பாத காந்திஜி எரவாடா சிறையில் சாகும் வரை உண்ணா விரதம் இருந்தார். நெருக்கடிக்குள்ளான அம்பேதகர் காந்திஜிடன் பேச்சு வார்த்தை நடத்தினார் அது பூனா ஒப்பந்தம்.

36 இடம்: கர்நாடகத்தில் பக்தி இயக்கம் சிவலிங்கம்

பொருள்: நமது உடம்பே கோயில் செய்யும் செயலே கைலாசம்.

விளக்கம் : இரங்கநாத் கண்டட்ளக்குண்டே அவர்கள் எழுதிய பாடலில் சொல்லப்பட்ட கருத்து.

37) இடம் :- சுயம் நலம் விந்தன்.

பொருள்: வேலப்பனின் மனைவி முருகாயியை வெட்கம்கவ்விக் கொண்டது

விளக்கம் :- வேலப்பனின் வேலைச்சிரமத்தைப் பார்த்த மாதவராயர் முருகாயியை ஒரு மாதம் நிழலில் இருக்க சொல்லிபாரு அப்புறம் நீ அவளை விட்டு அந்தண்டை இந்தண்டை போகவே முடியாது என்று சொன்னதும் வேலப்பனின் மனைவிட்டுகாயியை வெட்கம்பிடுங்கிதின்றது .

## பகுதி-4

**அ. எவையேறும் இரண்டு வினாக்களுக்கு 5 அல்லது 6 வோக்கியக்களில் விடை எழுதுக:**

**[2x4=8]**

38).இந்து இசுலாம், கிருத்தவம் சமணம் ஆகிய நால்வகையான மதங்களை கொண்டிருந்தாலும் நால்வகை மதத்தை தழுவிய மக்களும் தமக்குள் உறவோடு வாழும் நாடு நமது நாடாகும். இங்குள்ள மக்கள் தமக்கு வரும் நன்மையும், தீமையும் ஒன்றாக கருதும் நலம் மிகுந்த நாடு என்று பாராட்டுகின்றார்.

39). ஒருவர் பெறத்தக்க சிறப்பு உடையது ஊக்கம் ஆகும். அவ்வூக்கம் இல்லாதவர் பிற செல்வங்களைப் பெற்றிருந்தாலும் அவர் இல்லாதவரே ஆவர். ஊக்கமே ஒருவனுக்கு நிலையான செல்வமாகும். பிற பொருட் செல்வமானது. நில்லாமல் நீங்கி விடும். ஊக்கத்தை உறுதியாக பெற்றவர். தாம் பெற்ற செல்வத்தை இழந்த போதும் அதற்காக வருந்த மாட்டார். சோர்வில்லாத ஊக்கம் உடையவனிடம் செல்வம் தானாகவே அவன் இருக்கும் இடத்திற்கு வழிகேட்டுக் கொண்டு செல்லும். நீர்ப்பூக்களின் உயர்வு அது இருக்கும் நீரின் அளவை பொறுத்து இருக்கும். அது போல மக்களின் உயர்வு அவர் கொண்ட ஊக்கத்தின் அளவை பொறுத்தே அமையும்.

40). குருக்கோட்டையிலிருந்து பகை அரசரது யானையின் முகத்தில் செலுத்திய அம்பு பூமியில் படியும்படியாக நின்ற வில்லை உடையவன். பூமியை ஆளப் பொருத்தமான நீதியை உடையவன். பசுமையான மாலையை அணிந்தவன் நந்திவர்ம பல்லவன் ஆவான். அவனது அருளை பெறுகின்ற சமயத்தில் குளிர்ந்த அலைகள் வீசும் கடலோசை மிகுந்த ஒளிக்கும் படியாகவும் அலைகின்ற இளந்தென்றல் காற்று அசைவதைக் காணலாம். நிலவின் சிறப்பை மிகுவிக்கின்ற இளம்பிறை மிகுந்த ஒளி வீசும்படியாகவும் உணர்வதாகத் தலைவியின் நிலைமையைக் கலம்பக ஆசிரியர் கூறுகின்றனர்.

## பிரிவு -2

**(ஆ) ஏவையேனும் இரண்டிற்கு ஐந்து அல்லது ஆறு) வாக்கியங்களில் விடையளி**

**[2×4=8]**

41). தன் காதலன் தனது சகோதர்களால் கொல்லப்பட்டு விட்டான் என்பதைத் தன் கனவில் கண்ட இஸபெல்லா காட்டிற்குச் சென்று தன் காதலன் தலையைமட்டு

கொண்டு வந்து ஒரு பூந்தொட்டியில் புதைத்து அதில் ஒரு மலர் செடியையும் நட்டுத் தனது கண்ணீரால் அதை வளர்த்து வந்தாள். ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் இஸ்பெல்லா பூந்தொட்டியில் அருகில் நின்று கண்ணீர் விட்டு அழுது விம்முவாள். அதனை வணங்குவதும் அதனோடு பேசி முணங்குவதும். அவனது அன்றாட பழக்கங்களாக இருந்தன.

42). 1981-இல் பிறந்த அம்பேத்கரின் குழந்தைப் பருவம் சாத்தாராவில் கழிந்தது. மும்பைக்குக் குடிபெயர்ந்த பின்னர் மெட்ரிக்குலேசன் தேர்வில் வெற்றி பெற்றார் எல்பின்ஸ்டன் கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்தார். பரோடா மன்னரின் உதவி தொகைப் பெற்று அமரிக்கா சென்று அங்குள்ள கொலம்பியா பல்கலைக் கழகத்தில் எம்.ஏ பட்டமும் பிஎச்டி பட்டமும் பெற்றார். பின்னர் அம்பேத்கர் இலண்டன் சென்று எம்.எஸ்ஸி பொருளாதாரம் பயின்றார்.பின்னர் அம்பேத்கர் இந்தியா திரும்பினார்.

43) இராமானுஜம் தனது மனைவி பாக்கியம் மகள் மைதிலியுடன் அண்ணாவின் மாப்பிள்ளை என்ற படம் பார்க்க திரையரங்கம் சென்றனர். ஏற்கனவே, திரைப்படம் தொடங்கி ஓடிக் கொண்டிருந்தது. ஒண்ணரை ரூபாய் வகுப்பில் கடைசி வரிசையில் அவர்கள் வந்து அமர்ந்தனர். பின்னால் இரண்டே கால் ரூபாய் வகுப்பில் மறைப்பதாகவும் இருந்து முறுமுறுப்பு எழுந்தது. படம் கொஞ்சம் தலையை தள்ளிக் கொள்ளும்படியும் கேட்டுக் கொண்டார். இராமாநுஜம் தலையைக் கழற்றிவிட்டு வரட்டுமா என்று கோபத்துடன் கூறினார். அதற்கு பதிலாக மண்டை பெரிதாக இருக்கிறதே தவிர உள்ளே ஒன்றுமில்லை என்று விடை தர. எக்ஸ்ரே கண்ணால் தன் மண்டை வழியே படம் பார்க்குமாறு கோபத்துடன் பதிலளித்தார். அப்போது ஒருவர் தியட்டரையேவிலைக்கு வாங்கி விட்டார் எனவும் பனை மர உயரம் உள்ளவர்களை குழிவெட்டி உள்ளே உட்கார வைக்கவேண்டு என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டிருந்தனர்.

## பிரிவு-3

**ஆ**

**[2x4=8]**

44). சாத்தன் தான் கண்ட கனவில் சாத்தன் கோயிலுக்குள் சென்றதும் எல்லாரும் தலைகுனிந்தபடி எனக்கு மோட்ச எனக்கு மோட்சம் என்று பல்லவி பதிபாடுகிறார்களே. தவிர, ஒருவராவது சிலையின் சாயலை ஏறிட்டும் பார்க்கவில்லை. என்ன அற்புதமான சிலை என்று ஒருவரும் முறுமுறுக்கவில்லை. இப்படியே, நாட்கள், மாதங்கள், ஆண்டுகள் நூற்றாண்டுகள் ஆகின்றன. இவ்வளவு ஆண்டுகளில் யாரும் அந்தச் சிலையின் ஒரு சாயலைக் கூட பார்த்து இரசிக்கவில்லை. எனக்கு மோட்சம் என்ற ஒரே பல்லவி தான் அதனால் சாத்தனுக்கு அவரு பிடிக்கிறது. சிலையை உடைக்கிறான் அது அவன் மேலேயே புரல்கிறது இரத்தத்தில் நனைகிறது அவனின் உற்சாகமும் களைகிறது என்று சாத்தன் சிலையை உடைத்ததற்கான காரணமாகும்.

45). மாதவராயர் வேலப்பனிடம் நீயும், நானும் பணம் போட்டுக் கூட்டாக ஆட்கள் வைத்து வேலை செய்யலாம். நல்ல வேலைப்பாட்டுடன் செய்து, காட்சி அறையில் வைத்து நம்மைபோல் யாரும் கட்டில் செய்யக்கூடாது என்ற உத்திரவாதம் வாங்குக் கொள்வோம். நிறைய கிளைகளைத் திறப்போம். இலாபத்தில் சரிபாதி எழுத்துக் கொள்வோம். இல்லையென்றால் மாந்தோப்பை நீயே வைத்துக்கொள்.

இலாபத்தையும் நீயே வைத்துக்கொள். எப்படி இருந்தாலும் நீ நன்றாக இருக்க வேண்டும். அது போதும் எனக்கு' என்று வலையை விரித்தார்.

46). வானத்திலிருந்து பூமி எங்கும் இடைவெளி இல்லாமல், மழை பெய்து கொண்டிருந்தது. கொடுமையான நரகத்தில் மாட்டிக்கொண்டது போல் தான் நான் உணர்ந்தேன். ஆளரவமற்ற அந்த மலையில் பேய் இரைச்சலாத மழையின் சத்தம் மட்டும் இடைவிடாது ஒலித்துக் கொண்டிருந்தது. எனக்குத் தெரிந்த பெயரெல்லாம் மனத்திற்குள் சொல்லி மழையை நிறுத்தும்படி மன்றாடிக் கேட்டுக்கொண்டேன். எந்தத் தெய்வமும் என் பேச்சைக் கேட்பதாக இல்லை. ஒரு வேளை மழைச்சத்தத்தில் கேட்கவில்லையோ என்னவா? இன்னும் மூர்க்கமாக இடியுடன் வானமே இழந்து விடும் ஓசையுடன் ரீங்காரமிடுவதைப் போன்ற ஒரு அசர சத்தத்தை மழை எழுப்பியது என்று மஞ்சனாத்தி மலையில் வரும் மழை கண்டு சிறுமி அஞ்சிதைக் கூறினாள்.

## பகுதி- 5

### பிரிவு-1

**(அ) கீழ்க்காணும் பாடலின் பொருளை எழுதி அணியை விளக்குக:**

**(1x5=5)**

47) அணி, பொருள். உவமானம், உவமேயம்' உருவ உருபு இருக்க வேண்டும். இந்த தலைப்புகளுடன்இருக்க வேண்டும்.

(அல்லது)

48) அணி, பொருள், உவமானம், உவமேயம் உருவ உருபு (அ) உவம உருபு இந்த தலைப்புகளுடன் இருக்க வேண்டும்.

### பிரிவு-2

**(ஆ) எவையேறும் ஏழு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக. (7x2=14)**

**49) சேர்த்தெழுதுக**

1.அருளுடைய

2.பாலினுமினிய

**50). பிரித்தெழுதுக**

1. உலகம்+ஒரு

2. கருணை+கடல்

**51) எதிர்ச்சொல் தருக**

1.எனக்கு

2.இங்கே

**52) இலக்கணக்குறிப்பு தருக**

1. இரட்டைக்கிளவி

2. பண்புத்தொகை

**53) கீழ்வரும் தொடர்களை நல்லதமிழில் எழுதுக!**

1. காலையில் சிற்றுண்டி உண்டாயா? 2. இன்று பத்து மணி அளவில் நேர்க்காணல்நடக்கிறது

**54) கீழ்வரும் தொடர்களை வாக்கியத்தில் அமைத்தெழுதுக**

1). உயிர்களைக் கொல்லக்கூடாது.

2. இறைவனின் அருள் வேண்டும்.

**55) சொற்களின் வேறுபாடு அறிந்த பொருள் எழுதுக**

1. ஆண், பெண் பேதம் பார்க்கக்கூடாது 2) ஆன் (பசு) நெய் உடலுக்கு நல்லது.

**56). செய்வினை வாக்கியங்களை செயப்பாட்டுவினை வாக்கியங்களாக மாற்றி எழுதுக**

1. கல்லணை கரிகாலனால் கட்டப்பட்டது.

2. தமிழ் மொழி மூவேந்தரால் வளர்க்கப்பட்டது.

**பகுதி-6**

**பிரிவு-1**

**(அ) கீழ்வருவனவற்றுள்** ஏதேனும் ஒன்று பற்றிக் கட்டுரை வரைக [1x5-5]

57). தலைப்பு, முன்னுரை, பொருளடக்கம், முடிவுரை அமைப்பில் கட்டுரை இருக்க வேண்டும்.

(அல்லது)

58). தலைப்பு. முன்னுரை, பொருளடக்கம், முடிவுரை அமைப்பில் கட்டுரை இருக்க வேண்டும்.

**பிரிவு-2**

**(ஆ) கீழ்க்காணும் வினாக்களில் ஏதேறும் ஒன்றிற்கு விடை தருக. [1x5=5]**

59). கேள்விக்கேற்ற முறையில் கடித்ததை கட்டமைக்க வேண்டும்.

அல்லது

**60). கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களை தமிழில் மொழிபெயர்த்து எழுதுக**

1. பணம் பத்தும் செய்யும்

2. முயற்சி திருவினையாக்கும்.

3. குறை குடம் கூத்தாடும்.

4. முள்ளை முள்ளால் எடு

5. தனக்கு மிஞ்சியதுதான் தானமும் தருமமும்.